<u>**Sub Court, Eraniel**</u>

O.S. No.56/2024
Date: 11.02.2026.
PW1 - திரு. வறீதய்யா

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி</u>

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். பிரதிவாதிக்கு நான் 21.02.2022 ம் தேதி எனது வீட்டில் வைத்து ரூ.4,50,000/– ஐ பணம் ரொக்கமாக கொடுத்ததாக தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் 2 வது பத்தியில் நான் அவ்வாறு குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால், அது தவறானது என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. 2022 ம் வருடம் நான் பிரதிவாதிக்கு எதிராக ரூ.35,00,000/– காசோலை மோசடி வழக்கு, இரணியல் விரைவு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். பிரதிவாதிக்கு ரூ.35,00,000/– கடன் கொடுத்து அவர் அதனை திருப்பி கொடுக்காத நிலையிலும், அதே வருடம் 2022 ல் மீண்டும் ரூ.4,50,000/– எதன் அடிப்படையில் கடன் கொடுத்தேன் என்றால், நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன். அதற்காக தான் Promissory Note ம் எழுதி வாங்கினேன். பிரதிவாதி ரூ.35,00,000/– கடன் வாங்கிய போது பிரதிவாதி மற்றும் அவருடைய மனைவி பிரஜா ஆகியோரிடம் வீட்டு பத்திரம் Xerox ல் கையெழுத்து வாங்கினேன். சர்வே எண்ணை கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக நான் அவ்வாறு பத்திரம் வாங்கினேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதி சிட்டி யூனியன் வங்கி மார்த்தாண்டம் கிளையில், அதே சொத்தை அடமானம் வைத்து 2 முறை கடன் வாங்கிய விபரம் எனக்குத் தெரியாது. பிராதில் இது பற்றிய விபரங்களை நான் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால், சரிதான். அவ்வாறு தகவலை நான் தெரிந்து கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதியின் மனைவியிடம், பிரதிவாதியின் கையொப்பம் பெற்ற ஒரு காசோலை வாங்கி இருக்கிறேன் என்றால், சரியல்ல. Promissory Note ல் உள்ள சாட்சிகள் எனக்கு உறவினர்கள் என்றால், சரியல்ல. சுதிர் என்பவர் பிரதிவாதி பிரின்ஸ் தரப்பில் சாட்சி. எனது தரப்பு சாட்சியின் பெயர் நிக்கோலஸ். அவரை எனது தரப்பு சாட்சியாக இந்த வழக்கில் விசாரிக்கலாம். நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்கிறேன் எனறால், சரிதான். அதற்கு நான் Licence வைத்திருக்கிறேன். அந்த

Licence ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். இந்த நீதிமன்றத்தில் எனக்கு OS.60/2023 என்ற அட்வான்ஸ் பத்திர வழக்கு உள்ளது. விரைவு நீதிமன்றத்தில் 5 வழக்குகள் உள்ளன. பிரதிவாதிக்கு நான் கடன் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அவரிடம் நான் Promissory Note எதுவும் எழுதி வாங்கவில்லை என்றாலும், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள Promissory Note போலியானது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.